## தரம் உயர்த்தப்பட்ட அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயின்று - முதல் ஆண்டில்

# அகில இந்திய தொழிற் தேர்வில் முதலிடம் பெற்ற மாணவர்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்!

சென்னை, அக்.25-

**தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களாக தரம் உயர்த்தப்பட்ட அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று முதல் ஆண்டிலேயே அகில இந்திய தொழிற் தேர்வில் முதலிடம் பெற்ற 29 மாணவ, மாணவியர்கள் மற்றும் 1 பயிற்றுநர் ஆகியோர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (24.10.2024) தலைமைச் செயலகத்தில், தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களாக தரம் உயர்த்தப்பட்ட அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று முதல் ஆண்டிலேயே அகில இந்திய தொழிற் தேர்வில், இந்திய அளவில் பல்வேறு தொழிற் பிரிவுகளில் முதலிடம் பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 29 மாணவ, மாணவியர்களும் மற்றும் காட்டுமன்னார் கோவில் அரசினர் தொழிற் பயிற்சி நிலைய பயிற்றுநர் ஒருவரும் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

### 4.0 தரத்திலான தொழில்நுட்ப மையங்கள்!

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் கீழ் இயங்கி வரும் 71 அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் 2877.43 கோடி ரூபாய் செலவில் டாடா டெக்னாலஜீஸ் லிமிடெட் நிறுவனத்துடன் இணைந்து தொழில் 4.0 தரத்திலான தொழில்நுட்ப மையங்களாக தரம் உயர்த்தப்பட்டன.

தொழிற் பயிற்சி நிலையங்களுக் கான அகில இந்திய தொழிற் தேர்வுகள் ஒவ்வொரு ஆண்டும் அனைத்து மாநிலங்களுக்கும் சேர்த்து ஒரே தேர்வாக நடத்தப்படுகிறது. 2023-2024ஆம் கல்வியாண்டு தேர்வு 12.08.2024 முதல் 9.09.2024 வரை நடைபெற்றது. இத்தேர்வில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 26,236 அரசு தொழிற் பயிற்சி மாணவ, மாணவியரும் மற்றும் 19,097 தனியார் தொழிற்பயிற்சி மாணவ, மாணவியரும் என மொத்தம் 45,333 மாணவ மாணவியர் பங்கேற்றனர்.

### அகில இந்திய அளவில் முதலிடம் பெற்ற மாணவர்கள்!

இத்தேர்வில் 24,853 (94.72%) அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவ மாணவியரும், 16,738 (87.64%) தனியார் தொழிற்பயிற்சி நிலைய மாணவ மாணவியரும், என மொத்தம் 41,591 (91.74%) மாணவ - மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில், தமிழ்நாட்டில் தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களில் பயிற்சி தொடங்கப்பட்ட முதல் ஆண்டிலேயே Industrial Robotics தொழிற் பிரிவில் வேப்பலோடை அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பயின்ற மாணவன் என்.அந்தோணிசேசுராஜ் மற்றும் திருச்சி, அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பயின்ற மாணவி என். மோகன பிரியா ஆகியோர் அகில இந்திய அளவில் முதலிடம் பெற்றுள்ளனர்.

Manufacturing Process Control and Automation தொழிற் பிரிவில் சிதம்பரம் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பயின்ற மாணவி யு. பிரசிதா மற்றும் வேப்பலோடை அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பயின்ற மாணவர் எஸ். மணிமுருகன் ஆகியோர் அகில இந்திய அளவில் முதலிடத்தை பெற்றுள்ளனர்.

### 5 தனியார் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பயின்றவர்கள்!

Information Technology தொழிற் பிரிவில் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் (மகளிர்), கோயம்புத்தூரை சார்ந்த செல்வி கே.இந்துஶ்ரீ அகில இந்திய அளவில் முதலிடம் பெற்றுள்ளார். மேலும் நவீன கால தொழிற்பிரிவுகள் உட்பட்ட பல்வேறு தொழிற் பிரிவுகளி லும் தமிழ்நாட்டைச் சேர்ந்த 19 அரசு தொழிற் பயிற்சி நிலைய மாணவ, மாணவியரும் மற்றும் 5 தனியார் தொழிற் பயிற்சி நிலைய மாணவ, மாணவியரும் என மொத்தம் தமிழ்நாட்டைச் சேர்ந்த 29 மாணவ மாணவியர் அகில இந்திய அளவில் முதலிடத்தை பெற்றுள்ளனர்.

பயிற்றுநர்களுக்கான பயிற்சியில் (CITS) பயிற்சி பெற்ற காட்டுமன்னார் கோவில் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தை சேர்ந்த பயிற்றுநர் வி. ஸ்வேதா, Welder தொழிற் பிரிவில் அகில இந்திய அளவில் முதலிடத்தை பெற்றுள்ளார்.

இவ்வாறு, அகில இந்திய அளவில் முதலிடம் பெற்று தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்த 29 மாணவ மாணவியரும் மற்றும் 1 பயிற்றுநரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை செயலாளர் கொ. வீர ராகவ ராவ், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் பா.விஷ்ணு சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வறுமையை அளவிடும் தவறான முறைகள் : உலக வங்கியின் அளவீடுகளில் உள்ள குறைபாடுகள்

பொருளாதார அறிஞர் பேரா.பிரபாத் பட்நாயக்

வறுமையை அளவிடுவதில் உலக வங்கி மற்றும் ஐ.நா. வளர்ச்சித் திட்டம் (UNDP) போன்ற சர்வதேச நிறுவனங்களின் அணுகுமுறையில் பல குறைபாடுகள் உள்ளன.

**முக்கிய விமர்சனங்கள்**

சொத்து நிலை கணக்கிடப்படவில்லை

- தற்போதைய அளவீடுகள் மக்களின் வருமானத்தை மட்டுமே கணக்கில் எடுக்கின்றன.
- சொத்துக்களின் இழப்பு கணக்கில் எடுக்கப்படவில்லை.
- நவீன தாராளமய முதலாளித்துவத்தின் கீழ் ஏற்படும் சொத்து இழப்புகள் புறக்கணிக்கப்படுகின்றன.

செலவினத்தை வருமானமாக கருதும் தவறு

- வருமான தரவுகள் கிடைக்காத நிலையில் செலவினத்தை அடிப்படையாகக் கொள்கின்றனர்.
- கடன் வாங்கியோ, சொத்துக்களை விற்றோ செய்யப்படும் செலவுகளும் வருமானமாக கணக்கிடப்படுகிறது.
- இது உண்மையான வறுமை நிலையை மறைக்கிறது.

விலைக் குறியீட்டின் குறைபாடுகள்

- பொது சுகாதாரம், கல்வி போன்ற சேவைகளின் தனியார்மயமாக்கலால் ஏற்படும் செலவு உயர்வு கணக்கிடப்படவில்லை.
- அடிப்படை பொருட்கள் கிடைக்காமை காரணமாக மாற்றுப் பொருட்களுக்கு செல்லும் செலவு கணக்கிடப்படவில்லை.
- இதனால் உண்மையான வாழ்க்கைச் செலவு உயர்வு, குறைத்து மதிப்பிடப் படுகிறது.

**இந்தியாவின் நிலை**

கடன் சுமை அதிகரிப்பு

- 2012-2018 காலகட்டத்தில் கடன் வாங்கிய கிராமப்புற குடும்பங்கள் 11% அதிகரிப்பு.
- கடன் தொகை 43% அதிகரிப்பு.
- விவசாயிகளின் சராசரி சொத்து மதிப்பு 33% வீழ்ச்சி.

ஊட்டச்சத்து குறைபாடு

- தினசரி 2200 கலோரி பெறாத கிராமப்புற மக்கள் விகிதம் 58%லிருந்து 68% ஆக உயர்வு (1993-94 முதல் 2011-12 வரை).
- நகர்ப்புறத்தில் 2100 கலோரி பெறாதவர்கள் 57%லிருந்து 65% ஆக உயர்வு.
- 2017-18 முதல் நிலைமை மேலும் மோசமாகி உள்ளது.

உலக வங்கியின் தவறான கணிப்பு

- 2011-12ல் 12% என்றிருந்த "தீவிர வறுமை'2022-23ல் 2% ஆக குறைந்ததாக காட்டுகிறது.
- நாள் ஒன்றுக்கு 1.90 டாலர் (சுமார் ரூ.53) வருமானம் இருந்தால் வறுமை இல்லை. என்ற குறைந்த அளவுகோல்.
- உண்மை நிலையை பிரதிபலிக்காத அளவீடுகள்.

**வெற்று பொய்ப்பிரச்சாரம்**

"கோடிக்கணக்கானோர் வறுமையிலிருந்து மீட்கப்பட்டனர்" என்ற பா.ஜ.க. கூட்டணி அரசின் கூற்று வெறும் பொய்ப்பிரச்சாரமே. ஐ.நா.வின் நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDGs) நிறைவேற்றியதாக காட்ட நாடுகள் போட்டியிடும் நிலையில், இது போன்ற தவறான கணக்கீடுகள் மேலும் அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

◆ பீப்பிள்ஸ் டெமாக்ரசி (அக்.20) இதழில் எழுதியுள்ள ஆய்வுக் கட்டுரையில் இருந்து

நன்றி : **தீக்கதிர்**
**24.10.2024**

## செய்தி மக்கள் தொடர்புத்துறையில்

# கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்

*சென்னை, அக்.25-*

*தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் செய்தி மக்கள் தொடர்புத்துறையில் கருணை அடிப்படையில் இருவரை அலுவலக உதவியாளர்களாகப் பணி நியமனம் செய்து நியமன ஆணைகளை நேற்று (24.10.2024) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் வழங்கினார்கள்.*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு நிறைவேற்றி வரும் திட்டங்கள், அறிவிப்புகள், அரசின் சாதனைகள், செய்தி வெளியீடுகள், அறிக்கைகள், வேண்டுகோள்கள் அனைத்தும் மக்களை எளிதில் சென்றடையும் வகையில் அரும்பணிகளைத் தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை மிகச் சிறப்பாக நிறைவேற்றி வருகிறது.*

*தமிழ்நாடு அரசு, தலைமைச் செயலகம், செய்தி மக்கள் தொடர்புத் துறையில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து வந்த எஸ்.அன்பழகன் அவர்கள் கடந்த 5.10.2022 அன்று திரு நெல்வேலி அரசுப் பொருட்காட்சியில் பணியிலிருக்கும்போது, இயற்கை எய்தினார். அவருடைய சட்டப்படியான வாரிசுதாரர்களில் ஒருவரான அவரது இளைய சகோதரர் எஸ். குணாநிதி என்பவருக்கு கருணை அடிப்படையில் அலுவலக உதவியாளராக தமிழ் வளர்ச்சி (ம) செய்தித் துறை அமைச்சர் நேற்று (24.10.2024) பணி நியமன ஆணையை வழங்கினார்கள். அதே போல, சென்னை இராஜாஜி மண்டபம் (ம) காந்தி மண்டபத்தில் தேர்வு நிலை தோட்டப் பணியாளராகப் பணிபுரிந்து வந்த திருமதி. ஜி.வரலட்சுமி கடந்த 4.1.2024 அன்று இயற்கை எய்தியதால், அவருடைய ஒரே மகனான டி.வி. பரமேஸ்வர ராவ் என்பவருக்கு கருணை அடிப்படையில் அலுவலக உதவியாளர் பணி நியமனம் வழங்கி உரிய நியமன ஆணையை தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை அமைச்சர் நேற்று (24.10.2024) வழங்கினார்கள்.*

*பணி நியமன ஆணைகளைப் பெற்றுக் கொண்ட இருவரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களுக்கும் தங்களுடைய குடும்பங்களின் சார்பில் மனமார்ந்த நன்றி தெரிவிப்பதாகத் தெரிவித்தனர்.*

*இந்நிகழ்வின்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்தி நாதன், கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) மு.பெ. அன்பு சோழன் மற்றும் கூடுதல் இயக்குநர் (செய்தி) ச.செல்வராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.*

## நியாய விலைக்கடைகள் மூலம்

# மத்திய கூட்டுறவு வங்கிகளில் மக்களுக்கு சேமிப்புக் கணக்கு!

## தமிழ்நாடு அரசு நடவடிக்கை !

*சென்னை, அக்.25-*

*மத்திய கூட்டுறவு வங்கிகளின் மூலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் விவசாய உறுப்பினர்களுக்கு பயிர்க்கடன், உரக்கடன், கால்நடை பராமரிப்புக் கடன் உள்ளிட்ட கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கூட்டுறவு சங்கங்களில் அதிகளவு இளைஞர்களை ஈர்க்கும் வகையில் புதிய வங்கி திட்டங்களை செயல்படுத்த கூட்டுறவுத்துறை முன்னெடுப்புகளை எடுத்து வருகிறது.*

*அந்த வகையில், நியாய விலைக்கடைகள் மூலம் கூட்டுறவு வங்கிகளின் சேமிப்பு மற்றும் கடன் சேவைகள் பொது மக்களை சென்றடையும் விதமாக மத்திய கூட்டுறவு வங்கிகளில் சேமிப்பு கணக்கு தொடங்க தமிழ்நாடு அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*அனைத்து நியாய விலைக்கடைகளிலும் மத்திய கூட்டுறவு வங்கிகளின் சேமிப்புத் திட்டங்கள், நிரந்தர வைப்புத் திட்டங்கள் மற்றும் கடன் திட்டங்கள் குறித்தான கையேடுகளை விநியோகிக்க வேண்டும் என்று அனைத்து மண்டல பதிவாளர்களுக்கும் கூட்டுறவுத்துறை கடிதம் எழுதியுள்ளது.*

*பொதுமக்களுக்கு சேமிப்புகணக்கு தொடங்கிட உதவும் நியாய விலைக்கடை பணியாளர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*



மேயர் திருமதி ஆர்.பிரியா, நேற்று (24.10.2024) சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், ரூ.32.62 கோடி மதிப்பீட்டில் ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள விக்டோரியா பொது அரங்கினை புனரமைத்து, மறுசீரமைப்பு செய்யும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## மகாராஷ்டிரா சட்டப்பேரவைத் தேர்தல்:

# காங்கிரஸ் கூட்டணி தொகுதி உடன்பாடு!

## 3 கட்சிகளும் தலா 85 தொகுதிகளில் போட்டியிட முடிவு!

*மும்பை, அக்.25-*

*மகாராஷ்ட்ரா சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு காங்கிரஸ், உத்தவ் தாக்கரேவின் சிவசேனா, சரத் பவாரின் தேசியவாத காங்கிரஸ் இடையே தொகுதி உடன்பாடு ஏற்பட்டுள்ளது. 3 கட்சிகளும் தலா 85 தொகுதிகளில் போட்டியிட உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*மகாராஷ்டிராவில் உள்ள 288 சட்டமன்ற தொகுதிகளுக்கும் வரும் நவம்பர் 20ஆம் தேதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. இந்நிலையில் எதிர்க்கட்சிகள் அடங்கிய மகா விகாஸ் அகாடி கூட்டணி, தங்களுக்கு இடையேயான தொகுதி பங்கீட்டில் உடன்பாட்டை எட்டியுள்ளன.*

*அதன்படி, காங்கிரஸ், உத்தவ் தாக்கரேவின் சிவசேனா, சரத் பவாரின் தேசியவாத காங்கிரஸ் தலா 85 தொகுதிகளில் போட்டியிட உள்ளதாக மாநில காங்கிரஸ் தலைவர் நானா படோலே தெரிவித்துள்ளார்.*

*மீதம் உள்ள தொகுதிகள் குறித்து சமாஜ்வாதிக் கட்சி உள்ளிட்ட கூட்டணியில் உள்ள பிற கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும், ஓரிரு நாளில் இது குறித்து அறிவிப்பு வெளியாகும் என்றும் நானா படோலே கூறினார். மஹா விகாஸ் அகாடி கூட்டணி இத்தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைப்பது உறுதி என்றும் அவர் தெரிவித்தார்.*



கனவு ஆசிரியராக தேர்ந்தெடுக்கப்பட்ட 54 அரசுப் பள்ளி ஆசிரியர்களுடன் பிரான்ஸ் நாட்டிற்கு கல்விச் சுற்றுலா சென்றுள்ள அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என முழங்கிய பிரெஞ்சுப் புரட்சியின் நினைவாக கட்டப்பட்ட ஈஃபிள் கோபுரத்தை பார்வையிட்டார்.